**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண்.84/2022**

பெயர் : மதிவாணன் P.W.2.

த/பெ. : அகோரம்

தேதி : 19.12.2024.

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வாதி சாவித்திரியை தெரியுமா என்றால் எனது மைத்துனரின் மனைவியாவார். எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சொத்து பிரச்சனைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து யாருக்கு சொந்தம் என்றால் சொக்கலிங்கம் என்பவருக்கு சொந்தமானதாகும். சொக்கலிங்கத்திற்கு வாரிசுகள் யார், யார் என்றால், பாலு, ராமசாமி, தேவசேனா, உஷா, சாவித்திரி ஆகியோர்கள் ஆவார்கள். இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி பாலகிருஷ்ணனை தெரியுமா என்றால் தெரியும். அவரை இந்த வழக்கில் சேர்த்ததற்கான காரணம் என்றவென்றால் தாவா சொத்தில் அவர் குடியிருந்து வருவதால் இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். வாதிக்கு நான் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.